மலர் : 9 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 6
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஏப்ரல் 2009

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विल्लेज मिनिस्ट्री ഹണ്ട്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

ஆண்டு சந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ.250

# 100- கிராம ஊழியம்

## TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




TVGM - 2009 ஏப்ரல்
கர்த்தரின் வாக்குத்தத்தம்

**உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.**
மத்தேயு 6:4



கர்த்தருடைய கிருபையினால் 03.02.2009 அன்று கறம்பக்குடி **அக்ரஹாரம்** – புதுக்கோட்டை மாவட்டத்தில் கட்டப்பட்டிருந்த AJC ஜெபவீட்டை **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** ஜெபத்துடன் திறந்து வைத்தார்.

**நன்றி**

**சகோதரி டெய்ஸி ஜார்ஜ், கூடன்குளம். நெல்லை**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

# TAMIL VILLAGE GOSPEL MISSION

**Chief Executive officer    Letter Dated: 03.03. 2009**

**கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,**

**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்**



தேவனுடைய மிகுந்த கிருபையினால் நாங்கள் ஒரிஸாவில் துன்பப்படுத்தப்பட்ட சில கிராமங்களுக்குச் சென்று அதில் 2 கிராமங் களில் 82குடும்பங்கள் மற்றும் 51 போதகர்களுக்கு அரிசி வழங்க முடிந்தது . ஒரிஸாவிலுள்ள இந்த ஜனங்கள் தங்களது வழக்கமான வாழ்க்கையினை மீண்டும் பெறவும், அவர்களது விசுவாசத்தில் உறுதியாய் வளரவும் ஜெபியுங்கள்.

சேலம் ஏற்காடு யூனியனில் 100 கிராம ஊழியம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. மேலும் 100 கிராம ஊழியத்தின் இறுதி நாளில் நமது புதிய தலைமைத்துவப் பயிற்சி நிலையத்திற்கு சூட்டப்படவிருக்கும் பெயர் குறித்து சிறப்பு பிராத்தனை ஏறெடுக்கப்பட்டது. இந்தப் பெயர் குறித்து நாங்கள் பரிசீலித்து வருகிறோம். ஏப்ரல் மாத இறுதியில் இது குறித்து முடிவு செய்யத் திட்டமிட்டுள்ளோம். இதற்காக ஜெபியுங்கள்.

தேவனுடைய கிருபையால் TVGM, கிறிஸ்துவை மக்களுக்கு அறிவிக்கும் தனது ஊழியத்தின் 30 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

மேலும் நான் TVGM யை பொறுப்பெடுத்து தேவனுடைய கிருபையால் 5 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளேன். சில வசதிகளை முன்னிட்டு 30 ஆவது ஆண்டு விழாவை 2009 ஏப்ரல் 29க்குப் பதில் ஏப்ரல் 24ம் தேதி நடத்துகிறோம்.

2009 ஏப்ரல் 4 சனிக்கிழமை நாகர்கோயிலில் பிலிப்ஸ்புரம் CSIயில் ஒரு தரிசன முகாம் நடத்த உள்ளோம். ஜெபியுங்கள் பங்கு பெறுங்கள்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.**

கிறிஸ்துவின் பணியில்,

**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

---

**ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார். நீதி.19:17**

**வேதாகமத்தின் அடிப்படையில் சமுதாய கரிசனை கருத்தரங்கு**

**( 100-கிராம ஊழியர் & TVGM முழுநேர ஊழியர்கள் )**

நாள் : 2009 ஏப்ரல் 23, 24 வியாழன், வெள்ளி (காலை9–5)

இடம் : **TVGM** தலைமை அலுவலகம், 100–கிராமம், திருச்சி.

**நடத்துபவர் : சகோ. R.எட்வின்,**
ICRM,ஒரிஸா( EFICOR சார்பில் )

# உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.

மத்தேயு 6:4

கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சகோதரனே, சகோதரியே!

**உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.**

**நீங்கள் செய்ய வேண்டிய காரியம் என்ன ?**

1. தர்மம் செய்யும்போது தாரை ஊதுவியாதே.
2. அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு.
3. உபவாசிக்கும்போது அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவுக்கே காணப்படட்டும்.

மூன்று காரியங்களில் அந்தரங்கம் தேவை. ஒரு காரியத்தை மட்டும் இந்த மாதத்தில் தியானிப்போம்.

## தர்மம் செய்தல்

தர்மஞ்செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்காக தர்மம் செய்யாதே.

அப்படிச் செய்தால், மனுஷர் உன்னைப் புகழுவார்கள். உனக்கு மகிழ்ச்சியும், கெம்பீரமும் உண்டாகும். ஆனால் பரலோகத்திலிருக்கிற உன் பிதாவினிடத்தில் உனக்குப் பலனில்லை.

ஆதலால் தர்மம் செய்யும்போது, விளம்பரப்படுத்தாதே. விளப்பரப்படுத்தினால் இந்த உலகத்தோடு உன்னுடைய பலன் முடிந்து விடுகிறது.

மிக முக்கியமாக, உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக்கடவது.

உனக்கே உன் தர்மம் அறியப்படாமல் இருக்கட்டும். தர்மம் செய்வதை உடனே மறந்து விடு. எப்போது செய்தோம், யாருக்கு செய்தோம், ஏன் செய்தோம் என்ற கேள்விக்கெல்லாம் பதில் முழுமையாக மறந்து போனதாக இருக்கட்டும். **நீ உன் தர்மத்தை மறந்து போகும்போது, தேவன் அதை மறந்து போகாமல், தன்னுடைய பிள்ளைகள் மூலம் உன்னைக் கனப்படுத்துவார்.** அப்பொழுது, நீ இருதயத்தின் ஆழத்திலிருந்து கர்த்தரை மகிமைப்படுத்துவாய்

ஏனெனில் **எபி.6:10** கூறுகிறது: உங்கள் கிரியையையும் . . . அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுவதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே.

தர்மம் என்று சொல்லும்போது, பிச்சைக்காரர்களுக்கு பிச்சை போடுதல் என்று மட்டும் நாம் நினைக் கிறோம்.

ஆனால் **2கொரி.9:12,13**

இந்தத் தர்மசகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர் தேவனை ஸ்தோத்தரிப்பதினாலே சம்பூரண பலனுள்ளதாயும் இருக்கும்.

அவர்கள் இந்தத் தர்மசகாயத்தினாலாகிய நன்மையை அனுபவித்து, **நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கீழ்படிதலோடே அறிக்கையிட்டிருக்கிற தினிமித்தமும்,** தங்களுக்கும் மற்ற அனைவருக்கும் நீங்கள் உதாரத்துவமாய்த் தர்மஞ்செய்கிறதினிமித்தமும், அவர்கள் தேவனை மகிமைப்படுத்தி, உங்களுக்காக வேண்டுதல்செய்து,

தேவன் உங்களுக்கு அளித்த மிகவும் விசேஷித்த கிருபையினித்தம் உங்கள் மேல் வாஞ்சையாயிருக்கிறார்கள்.

இந்த வசனங்களை வாசிக்கும் போது, **முதலாவது தர்மசகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவை நீக்குகிறது.**

அத்துடன் அநேகர் தேவனை ஸ்தோத்தரிப்பதினால், அந்த **தர்ம சகாயம் சம்பூரண பலனுள்ளதாயிருக்கிறது.**

**இரண்டாவதாக,** பரிசுத்தவான்கள் இந்த தர்மசகாயத்தினாலாகிய நன்மையை அனுபவிப்பது எதைக் குறிக்கிறதென்றால், **நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கீழ்படிதலோடே அறிக்கையிடுகிறீர்கள்.**

எனக்கன்பான கர்த்தருடைய பிள்ளைகளே!

சத்தியத்தை அறிந்து கொள்ளுங்கள்.

**பரிசுத்தவான்களுக்கு செய்யும் தர்ம சகாயம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கீழ்படிதலோடே அறிக்கையிடுவதற்கு சமமாக இருக்கிறது.** அல்லேலுயா.

ஆதலால் தான் **ரோமர் 12:13** கூறுகிறது பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள்.

**மூன்றாவதாக,** பரிசுத்தவான்களுக்கும் மற்ற அனைவருக்கும் நீங்கள் உதாரத்துவமாய் தர்மஞ் செய்கிறதினிமித்தம் அவர்கள் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள்.

**நான்காவதாக,** அத்துடன் உங்களுக்காக தேவனிடத்தில் வேண்டுதல் செய்கிறார்கள்.

**ஐந்தாவதாக**, மேலும் உங்கள் மேல் வாஞ்சையாயிருக்கிறார்கள்.

மேற்கண்ட 5 காரியங்களுக்காக தேவனைத் துதியுங்கள்.

**1கொரி.10:31** நீங்கள் புசித்தாலும் குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.

வேதம் சொல்கிறது: **யாக்கோபு 5:16** நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

**எபிரெயர் 13:16** அன்றியும் நன்மை செய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள். இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்.

**மத்தேயு 5:16** இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

### சமநிலைப் பிரமாணம்

**2கொரி.8:14,15** மிகுதியாச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை என்று எழுதியிருக்கிறபிரகாரம்,

**சமநிலைப்பிரமாண**த்தின்படியே, அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு **இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக.**

அன்பு நண்பரே!

நீங்கள் சேர்த்து வைக்கும் ஒவ்வொரு பணமும் பொருளும், பரிசுத்தவான்களின் குறைவிலே உதவி செய்வதற்காக என்பதை மறந்து போகாதேயுங்கள்.

இதே நேரத்தில் வேதம் சொல்கிறது: **லூக்.11:41** உங்களுக்கு உண்டானவைகளில் பிச்சை கொடுங்கள்.

**லூக்கா 6:38**

**கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்.**

இந்த மாதத்தில் பரிசுத்தவான்களுக்கு உதவி செய்வதில் முந்திக்கொள்ளுங்கள்.

**நீதி.19:17** ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்.

**யோபு 31:17** கூறுகிறது

தாய்தகப்பனில்லாத பிள்ளை என் ஆகாரத்தில் சாப்பிடாமல், நான் ஒருவனாய்ச் சாப்பிட்டதுண்டோ ?

**பக்தன் பாடுகிறார்:—**

**நெருக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டோரை**
**நீசரை நாம் உயர்த்திடுவோம்**
**பொறுக்க வொண்ணா கஷ்டத்துக்குள்**
**நிஷ்டூரத்துக்குள் படுகுழிக்குள்**
**விழுந்தனரே**
**தாசரே இத்தரணியை அன்பால்**
**இயேசுவுக்குச் சொந்தமாக்குவோம்.**

பாடுங்கள், பாடிக்கொண்டேயிருங்கள்.

இப்படியாக பரிசுத்தவான்களுக்கும், ஏழை,எளியவர்களுக்கும் பட்சமாய் உதவி செய்வோம்.

ஆனால் தாரை ஊதுவியாமல் அந்தரங்கமாக தர்மம் செய்ய முயற்சி செய்வோம்.

அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற

**உன் பிதா தாமே உனக்கு**
**வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.**

என்னுடைய **அந்தரங்க ஊழியத்தை, தியாகத்தை** யாருமே காணவில்லையே ? என ஏங்கும் சகோதரனே, சகோதரியே! உனக்காகவே கர்த்தருடைய வார்த்தை கடந்து வருகிறது.

பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**அந்தரங்கத்தில் பார்க்கிற**
**என் பிதா தாமே எனக்கு**
**வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.**

மீண்டும் மீண்டுமாக அறிக்கை செய்யுங்கள். **வெளியரங்கமாய்ப் பலனை காண்பீர்கள்.** ஆமென்.

**திருச்சி – வாழவந்தான்கோட்டை "கல்வாரி மலை ஜெபவீடு"**
**முதலாம் ஆண்டு நிறைவு விழா 2009 பிப்ரவரி 28**

**நன்றி :** Yishun Evangelical Church- பாஸ்டர் ஜோசப் ஜெபமணி

**சகோ. பி.டி.கிறிஸ்டோபர், சகோ. ஸ்டீபன்** ஆகிய இருவரும் கலந்து கொண்டு ஒரிஸா ஊழியத்தைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். பாஸ்டர் டேனியல் ரெங்கராஜ் குடும்பத்திற்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.





# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று. 2 தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## திருச்சி 100 - கிராம ஊழியம்

**நோக்கம்: 2009 ஏப்ரல் 20** திங்கள் காலை 9 மணி முதல் **ஏப்ரல் 24** வெள்ளி இரவு 10 மணி முடிய **திருச்சி அருகிலுள்ள** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி, **இயேசுவை அறிவித்து** வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**கூடும் இடம் : விபரங்களுக்கு:**சகோ.பன்னீர், செல் : **9943281640**

**உபவாச ஜெபம் : 2009 ஏப்ரல் 20** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2009 ஏப்ரல் 24** வெள்ளி இரவு **6 - 10** முடிய

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**கர்த்தருக்கு சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.** ஏசாயா 53:10

**சகோ. ஸ்டீபன் 'திருமண கிருபை'க்காக ஜெபியுங்கள்!**

TVGM-CEO சகோ. ஸ்டீபனுடைய திருமணத்திற்காக ஜெபித்தும் அறிமுகப்படுத்தியும், பிரயாசப்பட்டும் வரும் ஒவ்வொரு கர்த்தருடைய பிள்ளைகளுக்காக நன்றி செலுத்துகிறோம். ஆனாலும், இதுவரையிலும், **தேவன் முன் குறித்துள்ள ஏற்றத் துணை இன்னும் வெளிப்படவில்லை.**

TVGM தரிசனத்துடன்,கூடுதலாக இந்தியாவின் பல பகுதிகளில் Christian Leadership Training Centre(**IAS**, **IFS** Coaching centre) ஆரம்பிக்கவேண்டும் என்ற ஆத்தும தரிசனத்துடன் சகோ. ஸ்டீபன் ஜெபித்து வருவதால், ஆங்கிலம், இந்தி, தமிழ் ஆகிய மூன்று மொழிகளும் சரளமாக பேசவும், எழுதவும், (வட இந்திய கலாச்சாரத்தின் வளர்ந்த) Mission / Charity அலுவலகத்தை நிர்வாகம் செய்ய அழைப்புப்பெற்ற மகளுக்காக ஜெபித்து வருகிறோம். நீங்களும் ஜெபியுங்கள். **தேவனுக்கே மகிமை!**

# சேலம் மாவட்டம் - ஏற்காடு யூனியன் 100-கிராம ஊழியம் அறிக்கை



கர்த்தருடைய கிருபையால் சேலம் மாவட்டம் – ஏற்காடு யூனியனில் 16.02.2009 திங்கள் முதல் 20.02.2009 வெள்ளி வரை 100–கிராம ஊழியம் மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

சேலம் J.M.H.A **பாஸ்டர் குளோரி தாஸ்** அவர்கள் இந்த ஊழியம் நடைபெற ஒழுங்கு செய்தார்கள். தமிழ்நாட்டின் பல மாவட்டங்களைச் சேர்ந்த 56 கிராம ஊழியர்கள் இந்த ஊழியத்தில் கலந்து கொண்டார்கள்.



முதல் நாள் ஜெபத்தில் கிராம ஊழியர்கள் கூடி ஜெபிக்க ஏற்காடு ALC சபை Rev. **ஜெயசிங்** அவர்கள் இடம் கொடுத்து உதவி செய்தார்கள். மதிய உணவு **பாஸ்டர் பால்ராஜ்** அவர்கள் கொடுத்தார்கள். கடைசிநாள் கூடுமிடம், உணவு இவைகளை ஏற்காடு C.S.I.சபை Rev. **பிரபு சந்திரமோகன்** அவர்களும், கன்மலை ஜெபஊழியர் குழுவினரும் செய்தார்கள். ஏற்காடு மலையில் டயோசிசன் மிஷனெரி குழுவினர் நமது கிராம ஊழியர்கள் தங்குவதற்கும், உணவிற்கும், ஊழியம் செய்வதற்கும் பெரிதும் உதவி செய்தார்கள். குறிப்பாக DMPB **Rev. பென்னட் வால்ட்டர், Rev.கால்டுவெல், Rev.செல்வராஜ்** இவர்கள் நல்ல ஆலோசனைகளை கொடுத்தார்கள்.

முதல் நாள் ஜெபத்தில் ஏற்காடு யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களை சொல்லி ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் TVGM ஸ்தாபகர் Bro.P.T.கிறிஸ்டோபர், காரியதரிசி Bro. ஸ்டீபன் கிறிஸ்டோபர் மற்றும் தேவஊழியர்கள் கலந்து கொண்டு, நமது கிராம ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்கள். ALC சபை Rev. ஜெயசிங் தேவசெய்தியளித்தார்கள். பின்பு ஊழியர்கள் 12 குழுவாக பிரிந்து தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். மதிய உணவிற்கு பின் கிராமங்களுக்குள் சென்று, 5 நாட்கள் அங்குள்ள வீடுகளுக்கு வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷப் புத்தகம், கைப்பிரதி, சிலுவைக்கொடி இலவசமாக கொடுத்து இயேசுவை அறிவித்தார்கள். மொத்தம் 10,286 யோவான் புத்தகங்களும், 15,000 கைப்பிரதிகளும், 10,000 சிலுவைக் கொடிகளும் கிராமங்களில் வழங்கினர்.

பின்பு 5 நாட்கள் ஊழியங்களை முடித்து ஏற்காடு C.S.I.சபையில் கிராம ஊழியர்கள் கூடி, கர்த்தர் கிராமங்களில் தங்களை எப்படியாக நடத்தினார் என்று

சாட்சி கூறினார்கள். இந்த ஊழியத்தின் போது 134 புறமத நண்பர்கள் தபால் மூலம் வேதபாடங்களை அனுப்பக் கேட்டனர்.

இந்த கடைசி நாள் ஜெபத்தில் TVGM ஸ்தாபகர் Bro.P.T.கிறிஸ்டோபர், காரியதரிசி Bro. ஸ்டீபன் கிறிஸ்டோபர் அவர்களும் கலந்து கொண்டு ஜெபத்தில் நடத்தினார்கள். ஒரிஸாவில் பாதிக்கப் பட்ட மக்களுக்கு உதவிகள் செய்ய திட்டமிடுவதற்காக புறப்பட்டு சென்ற இவர்களுக்காக 100–கிராம ஊழியர்களும், கூடிவந்த மற்ற தேவஊழியர்களும் ஜெபித்தார்கள்.



சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர் ஆரம்பிக்க விருக்கும் **கிறிஸ்தவ தலைமைத்துவ பயிற்சி மையத்திற்கு 'The Ambassador School of Learning**' என்ற பெயரை கொடுப்பது தேவசித்தம் தானா ? என ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.



இதைத் தொடர்ந்து சகோ. ஸ்டீபன் அவர்கள் **TASOL** ஸ்தாபனத்தின் நோக்கங்களையும் செயல்பாடுகளையும் குறித்து விளக்கம் அளித்தார்கள்.



இறுதியாக 100– கிராம ஊழியர்களுக்கும், உதவி செய்தவர்களுக்கும் டாக்டர் குளோரி தாஸ் அவர்கள் Hand Bag ஒன்று இலவசமாக வழங்கி அனைவரையும் உற்சாகப்படுத்தினார்கள்.

**தேவனுக்கே மகிமை.**

## கிராம ஊழியர்களின் சில அனுபவ சாட்சிகள்

**குழு 1: சகோ. மாற்கு மாரியப்பன், மகாராஜன், ஸ்டீபன்ராஜ், பிரபுதாஸ்.**

கூட்டுமேடு கிராமத்தில் சுவிசேஷம் அறிவித்தபோது பிரசவத்திற்காக ஒரு சகோதரிக்கு ஜெபித்தோம். 2 பேர் எங்களிடம் வந்து இந்த ஊரில் எல்லா வீட்டிற்கும் சென்றீர்களா ? என்றார்கள். நாங்கள் ஆம் என்றதும், அவர்கள் முதலில் சிறுபிள்ளைகளை சேர்த்துக் கொண்டீர்கள், இப்போது பெரியவர் களையும் சேர்த்துக் கொள்ள வந்துள் ளீர்கள். நாங்களும் உங்களோடு சேர்ந்து கொள்கிறோம். இந்த ஊரில் 23 லட்சம் ரூபாய் செலவில் எங்கள் தெய்வத்திற்கு கோவில் கட்டியுள்ளோம். இதை நாங்கள் என்ன செய்வது என்று வாக்குவாதம் செய்தார்கள். எங்களை அடிக்கவும் வந்தார்கள். நாங்கள் சாந்தமாக பேசி வேறு கிராமத்திற்கு சென்றோம். 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 800 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 2:** **பாஸ்டர் ஆல்வின், சகோ.ஜெபமலைநாதன், பீட்டர் ராமலிங்கம், தாவீது தங்கவேல்.**

சேட்டுக்காடு, மேல்தளம், கீழ்தளம், சுண்டக்காடு, செந்திட்டு ஆகிய கிராமங்களில் யோவான் புத்தகம் கொடுத்து, சத்தியத்தை அறிவித்தோம். மக்கள் எங்களை அன்போடு ஏற்றுக் கொண்டு, சுவிசேஷத்தைக் கேட்டனர். மொத்தம் 850 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3:** **சகோ. ஆரியப்பன், அன்பரசு, சூசைமாணிக்கம், பெஞ்சமின்.**

13 மலைக் கிராமங்களில் ஏறி இறங்கி மக்களை சந்தித்து யோவான் புத்தகம் கொடுத்து, சுவிசேஷம் அறிவித்தோம். அநேகருக்காக ஜெபித்தோம். மக்கள் விருப்பத்தோடு கேட்டார்கள். 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 850 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 4:** **சகோ. பிரேம் ஆனந்த், நோவா, அந்தோணி, பாபு சாலமோன்.**

கொளகூர், செட்டிப்பட்டி, பூமரத்துார், சொராக்காப்பட்டி கிராமங்களில் எதிர்ப் பில்லாமல் புத்தகங்கள் கொடுத்தோம். பாவ மன்னிப்பின் அவசியத்தை கூறிய போது கேட்ட மக்கள் யாவரும் ஆர்வமுடன் தங்களை ஒப்புக் கொடுத்து ஜெபித்தனர். வியாதியஸ்தர் களுக்காக ஜெபித்தோம். 1026 சுவிசேஷப் புத்தகங்களும், 840 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 5:சகோதரி எஸ்தர் கனகாம்புஜம், கிளமெண்ட்ஸ்மேரி, பிரிஸ்கில்லாமேரி, பரிபூரணம், அன்னக்கிளி.**

ஜெரினாகாடு, முருகன்நகர், லுத்தர்பேட்டை பகுதிகளில் மக்கள் வாஞ்சையாக சுவிசேஷப் புத்தகங்களை வாங்கினர். அநேகர் தங்கள் பிரச்சனை களைக் கூறி ஜெபிக்கக் கேட்டனர். ஒரு அம்மா வீடு கட்ட முடியாமல் அநேக வருடங்களாக தடையாக உள்ளது என ஜெபிக்கக் கூறினார். ஜெபித்தோம். இரண்டு நாள் கழித்து அந்த அம்மா, நீங்கள் ஜெபித்து சென்றீர்கள். இப்போது வீடு கட்ட அரசாங்கத்திலிருந்து ஆர்டர் வந்துள்ளது என்று சந்தோஷப்பட்டார்கள். 650 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 6:சகோதரி மேரி செல்லாபாய், மணியம்மாள்,தேவகிருபை,கரோலின், சலோமி சம்மனசு.**

நாங்கள் யோவான் புத்தகம், கைப்பிரதி, சிலுவைக் கொடி கொடுத்த கிராமங்களில் ஒருவர்கூட வேண்டாம் என்று சொல்லவில்லை. யாவரும் வாஞ்சையுடன் வாங்கினர்.சில வீடுகளில் ஜெபித்தோம். 980 சுவிசேஷப் புத்தகங்கள் 840 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7:சகோதரி டோரா லாசர், அமிர்தம்,சீலா, கிருபா பழனியம்மாள், சாந்தி ஸ்டேன்லி.**

அசம்பூர், அத்தியூர், கொம்பக்காடு கிராமங்களில் சுவிசேஷம் சொல்லி யோவான் புத்தகம் கொடுத்தோம். வழியில் இரண்டு இளம் விதவைகளை சந்தித்து சுவிசேஷம் கூறி ஜெபித்தோம். ஒரு வீட்டில் மகன் இறந்து 5 மாதங்கள் ஆகி, அழுகையும் கண்ணீருமாக இருந்தனர். இவர்களுக்காக ஜெபித்து ஆறுதல் கூறினோம். 750 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8:சகோதரி எஸ்தர், செலின், பிச்சையம்மாள், லீதியாள், நிர்மலா.**

நாங்கள் சென்ற கிராமங்களில் மலைவாழ் மக்கள் கல்வியறிவு இல்லாமல், இயேசுவை அறியாதவர்களாயிருந்தனர். சுவிசேஷம் சொல்லி ஜெபித்தோம். கரடியூர் கிராமத்தில் சுவிசேஷம் சொல்ல வந்த பலரை இக்கிராம மக்கள் விரட்டி அடித்துள்

ளார்கள். எனவே எங்களை அக் கிராமத்திற்கு போக வேண்டாம் என்றனர். நாங்கள் ஜெபத்துடன் சென்று, பயமில் லாமல் ஊழியம் செய்து, பத்திரமாக திரும்பி வர கர்த்தர் உதவி செய்தார். யாரும் எங்களை எதிர்த்து பேசவில்லை. சுவிசேஷத்திற்கு விரோதமாயிருக்கிற இந்த கிராமத்தைச் சேர்ந்த ஆண்கள் நாங்கள் போன நேரம் சேலத்திற்கு போய் விட்டார்கள் என்று பிறகு அறிந்தோம். 900 சுவிசேஷப் புத்தகங்களும், 800 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு 9:</u>சகோதரி கிரேஸ் பத்மா, வசந்தா, ஜோதிமணி, தெபோராள், லூயிஸ் அம்மாள்.**

லாங்கிலிப்பேட்டையை சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷம் சொல்லி, யோவான் புத்தகம் கொடுத்தோம். யாவரும் ஆர்வமுடன் வாங்கினார்கள். எந்தவித எதிர்ப்பும் இல்லை.1020 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 10:</u> சகோதரி மரியம்மாள், எஸ்தர் பேபி, அபியேல் அந்தோணியம்மாள், பாக்கியம், தேவபாக்கியம்.**

நாலுரோடு, ஒண்டிக்கடை, படகுதுரை பகுதிகளில் ஊழியம் செய்தோம். ஓரிடத்தில் 10 வாலிபர்கள் ஒன்றாக அமர்ந்து சிகரெட் பிடித்துக் கொண்டிருந் தார்கள். இவர்களிடம் **இயேசு உங்களை நேசிக்கிறார்** என்று சொல்லி, வேதாகமத் திலிருந்து சில போதனைகளை சொன்ன போது அன்புடன் கேட்டனர். இனி நாங்கள் சிகரெட் பிடிக்கமாட்டோம், நல்ல பிள்ளையாக இருப்போம், எங்களுக்காக ஜெபியுங்கள் என்றார்கள். கர்த்தர் இவர்களை இரட்சிக்கும்படி ஜெபித்தோம். 360 சுவிசேஷப் புத்தகங்களும், 800 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு 11:</u>சகோதரி கஸ்தூரி, மேரிமீனா, மரியாள், ரூத்பகவதி, அன்னாள்.**

போட்டுக்காடு, பில்லேரி பகுதிகளில் ஊழியம் செய்தோம். பல வியாதியஸ்தர் களுக்காக ஜெபித்தோம்.ஒரு வாலிபனிடம் சுவிசேஷம் சொன்னபோது, அவன் நான் ஒரு இந்து உங்கள் புத்தகம் எதுவும் வாங்க மாட்டேன் என்றான். அவனிடம் நாங்களும் இந்துக்கள் தான். இது மதமாற்றம் அல்ல. உண்மை கடவுளை ஏற்றுக்கொண்டு வாழ என்றோம். 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 12:</u>சகோ.இஸ்ரவேல், எபிநேசர், இஸ்தாக்கி, யோசுவா, ஆபிரகாம்.**

மலைவாழ் மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவித்தோம். இந்த மலையில் ஜென்ட்ஸ் வீட் என்ற பகுதியில் ‘கிம்’ என்ற தற்கொலைப் பகுதி ‘ உள்ளது. இங்கு சென்று ஜெபித்தோம். இங்கு வருகிற சுற்றுலா பயணிகளிடமும் சுவிசேஷம் அறிவித்தோம்.750 சுவிசேஷப் புக் , 970 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

## 2009 ஏப்ரல் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : திருச்சி
யூனியன் : துறையூர்
நாள் : 18.04.2009 சனி
நேரம் : காலை 9 மணி

**<u>நடைபெறும் இடம்</u>**

**பாஸ்டர்.D.ஜேம்ஸ்**
**ஜீவனுள்ள தேவனுடைய சபை**
49-C/81, **மாருதி நகர்,**
**யூனியன் ஆபிஸ் பின்புறம்**
**துறையூர் - 621 010.**
**திருச்சி மாவட்டம்.**

# ✷ இயேசு கிறிஸ்துவே கர்த்தர் ✷

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

1.**சகோதரி தாசம்மாள், கன்னியாகுமரி**

என் மகன் எங்களுக்கு விருப்பமில்லாத பெண்ணை திருமணம் செய்ய விரும்பினான். அதிலிருந்து விடுதலை பெற்றால் '**100–கிராம ஊழியம்**' பத்திரிக்கையில் சாட்சி எழுதுவதாகவும், ரூ.5000/ ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதாகவும் பொருத்தனை செய்து ஜெபித்து, தங்களுக்கும் கடிதம் எழுதினேன். கர்த்தர் விடுதலை தந்தார்.

2. **சகோதரி பியூலா, நீலகிரி.**

கர்த்தர் ஆண் குழந்தையை தந்தார்.

3. **சகோதரி சுலோச்சனா, நவலடி.**

**இரட்டிப்பான நன்மையைத் தருவேன்** என்ற வாக்குத்தத்த வசனத்தின்படி கர்த்தர் வெற்றியைத் தந்ததோடு, 80% மதிப்பெண்களையும் தந்தார்.

4. **சகோதரி ஆனிமேரி, இலங்கை.**

தங்கள் கடிதத்தில் **'என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள்'** என்ற வசனத்தை எழுதி அனுப்பினீர்கள். மருமகன்கள் 2 பேரும் உயர்தர பரீட்சை யில் வெற்றி பெற கர்த்தர் உதவி செய்தார்.

**திருச்சி - பொன்மலைப்பட்டி ஜெபவீடு பிரதிஷ்டைக்காக ஜெபியுங்கள்.**

**நன்றி :** *Yishun Evangelical Church* பாஸ்டர் ஜோசப் ஜெபமணி



நாள்: 26. 03. 09



## திருச்சி TVGM குறுகிய கால சீஷத்துவ வேதாகம பயிற்சி

**2009** ஏப்ரல் 22 புதன் மதியம் முதல் மே 31 முடிய, திருச்சி – சோமரசம்பேட்டையில் கடிதத் தொடர்பு ஊழியத்தின் மூலமாக இயேசுவை அறிந்தவர்களுக்கும், மற்றும் அனைத்து சபையிலுள்ள புதிய விசுவாசிகள் ஆண், பெண் இருபாலருக்கும் வேதாகம வகுப்புகள் நடத்தப்படும்.

தங்குமிடம், உணவு, படிப்பு இலவசம். ஒழுங்கும் கிரமுமாக வேதபாடம் கற்றவர்களுக்கு 2009 மே 31 ம் தேதி சான்றிதழ் வழங்கப்படும்.

**விண்ணப்பப்படிவம் பெற ரூ 10 மட்டும் TVGM தலைமை அலுவலகத்திற்கு (உங்கள் முழு முகவரியுடன்) அனுப்பி வையுங்கள்.**

உங்கள் சபை போதகரின் சிபாரிசு கடிதத்தையும், இணைத்து அனுப்புங்கள்.

**வயது, படிப்பு கவனிக்கப்படுவதில்லை.**

கர்த்தருடைய கிருபையினால் 11.02.2009 அன்று அபுதாபி அப்போஸ்தலர் சபை ஸ்தாபகர் **பாஸ்டர் Dr.ராஜ்குமார்** அவரது துணைவியார் சகோதரி **ஞானி ராஜ்குமார்** அவர்களும், **மகன் நவீன்** அவர்களும் TVGM-க்கு வந்து கர்த்தர் கொடுத்த அற்புத சுகத்தை சாட்சியாக அறிவித்து, தேவசெய்தியளித்தார்கள். பொன்னாடை போர்த்தி வரவேற்கப்பட்டது.












சகோ. பி.டி.கிறிஸ்டோபர், **சகோ. ராபின்சன்**, சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர் ஆகியோர் கர்த்தர் சகோதரன் நவீனுக்கு செய்த நன்மையை நினைத்து தேவாதி தேவனுக்கு துதி செலுத்தினார்கள். **தேவனுக்கே மகிமை!**

# ஒரிஸாவை நேசியுங்கள்!
# ஒரிஸாவிற்காக ஜெபியுங்கள்!

கர்த்தருடைய கிருபையினால் 2009 பிப்ரவரி 20ம் தேதி வெள்ளிக்கிழமை நானும் என் மகன் ஸ்டீபனும் திருச்சியிலிருந்து புறப்பட்டு சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காடு யூனியன் 100–கிராம ஊழியத்தின் கடைசி நாள் ஸ்தோத்திரக் கூட்டத்திற்கு சென்றிருந்தோம்.

**ஒரிஸாவிலுள்ள உபத்திரவப்பட்ட கிறிஸ்தவர்களை** நாங்கள் பார்ப்பதற்கு செல்கிறோம் என்று கூறி, நம் 100–கிராம ஊழியர்களிடம் உங்களுக்கு விருப்பம் இருந்தால் உங்களால் இயன்ற காணிக்கையை படைக்கலாம் அல்லது வாக்கு கொடுக்கலாம் என்று கூறியவுடன், ரூ.3500/- காணிக்கையாக கொடுத்தார்கள்.

100–கிராம ஊழியர்களின் தியாகத்தைப் பார்த்து, கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, ஒரிஸாவை நோக்கிப் புறப்பட்டோம்.

21ம் தேதி சனிக்கிழமை இரவு **கேசிங்கா** வந்தடைந்தோம். ICRM ஒருங்கிணைப்பாளர் **சகோ. எட்வின்,** அவரது உடன் ஊழியர் **சகோ. ஜான் கென்னடி** இருவரும் எங்களை வரவேற்க ரயில் நிலையத்தில் காத்திருந்தார்கள். இரவு 12 மணிக்கு **பவானி பட்டணம்** வந்து சேர்ந்தோம். அன்று இரவு நல்ல ஓய்வை கர்த்தர் கட்டளையிட்டார்.

22ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பவானிபட்டணத்திலுள்ள ICRM சபையில் தேவ செய்தி கொடுத்தேன்.

மறுநாள் 23ம் தேதி காலையில் பவானிபட்டணத்திலிருந்து நானும் ஸ்டீபனும், சகோ. எட்வின், சகோ. ஜான்கென்னடி, சகோ. ஜார்ஜ் ஆகியோர் ICRM ஜீப் மூலம் **உருளதானி** கிராமத்திற்கு வந்து சேர்ந்தோம்.

OVGM மேனேஜிங் டிரஸ்டி **சகோ. சுரேந்திரகுமார் நாயக்** அவர்களுடைய குடும்பத்துடன் ஐக்கியம் கொண்டோம்.

பின்பு TVGM மூலம் கட்டப்பட்டOVGM கம்யூனிட்டி ஹாலை பார்க்க சென்றோம். இரண்டு கதவுகள் மட்டும் உடைக்கப்பட்டிருந்தன.

அதன் பின்பு நிலம் அன்பளிப்பாக தந்தப் பெரியவரை பார்த்து ஜெபித்தோம்.

மதிய உணவுக்கு பின்பு **தும்டி பந்த்** கிராமத்திற்குச் சென்றோம். ICRM ஊழியர் **சகோ. ஆன்ட்ரு** வீட்டிற்கு சென்று ஜெபித்தோம். அங்கு உடைக்கப்பட்ட ஆலயத்தையும் கிறிஸ்தவ வீடுகளையும் பார்வையிட்டோம்.

பின்பு சகோ. சுரேந்திரகுமார் **கொக்சரா** கிராமத்திற்கு அழைத்துச்சென்று கூரை உடைக்கப்பட்ட ஆலயத்தையும் அங்குள்ள விசுவாசிகளையும் எங்களுக்கு அறிமுகப்படுத்தினார். பின்பு **தெங்கேகுடா** கிராமத்தைப் பார்த்துவிட்டு பாலிகுடா தங்கும் விடுதிக்குச் சென்றோம்.

மறுநாள் 24ம் தேதி செவ்வாய் கிழமை **மீடிக்யகியா** கிராமத்திற்கு ICRM மூலம் **ஷால்** வழங்குவதற்கு சென்றோம். அங்குள்ள ஜெபவீடு தரைமட்டமாக உடைக்கப்பட்டதையும் 36 கிறிஸ்தவர்களுடைய குடும்பங்கள் நொறுக்கப்பட்டு வீட்டுப் பொருட்கள் எல்லாம் களவாய் கொண்டுபோகப்பட்டு,

ஆடு மாடுகள் கடத்திக் கொண்டு போகப்பட்ட செய்தியை அறிந்தோம். ஆதலால் அந்த கிராமத்திலுள்ள எல்லா மக்களையும் கூடி வரச்செய்து அங்கு ஏற்பட்ட பிரச்சனையை விசாரித்தோம். மேலும் உங்களுக்கு என்ன உதவி தேவை என்று கேட்டப்பொழுது ஆகாரம் வேண்டுமென்று கூறினார்கள்.

மேலும் 2 கி.மீ தூரத்தில் **போரிக்யாகியா** கிராமம் இருப்பதாகவும் அங்குள்ள ECI ஆலயம் அடித்து நொறுக்கப்பட்டதாகவும் கூறினார்கள். ஆதலால் உடனே மகன் ஸ்டீபனும், சுரேந்திரகுமாரும் மோட்டார் சைக்கிள் மூலம் மேடு பள்ளங்களைக் கடந்து சென்று மக்களைப் பார்வையிட்டார்கள். 46 வீடுகள் தரைமட்டமாக நொறுக்கப்பட்டிருந்தது. இரவு பாலிகுடாவில் **பாஸ்டர். பீம்ராஜ்**–ஐ ஒரு ஹோட்டலில் சந்திக்க தேவன் வழிநடத்தினார்.

ஆதலால் மறுநாள் 25ம் தேதி புதன் கிழமை **பாஸ்டர். பீம்ராஜ்** மூலம் அந்த வட்டாரத்திலுள்ள ( ஜெபவீடுகள், கிறிஸ்தவர்கள் வீடுகள் அனைத்தும் அழிக்கப்பட்ட) 50 கிராம ஊழியர்களை ஓர் இடத்தில் கூடிவரச்செய்து அவர்களது பிரச்சனைகளை எழுத்தின் மூலம் எழுதி வாங்கவும், ஒவ்வொருவருக்கும் 24 கிலோ கொண்ட ஒரு மூட்டை அரிசி இலவசமாக ஜெபத்துடன் வழங்கவும் கர்த்தர் கிருபைசெய்தார்.

மேலும் **மீடிக்யகியா, போரிக்யாகியா** ஆகிய கிராமங்களிலும் ஒவ்வொரு வருக்கும் 5 கிலோ அரிசி இலவசமாக வழங்க கர்த்தர் கிருபை செய்தார். அன்று காலையில் **நுவாம்** கிராமத்தில் உடைக்கப்பட்ட RC கட்டிடத்தையும், எரிக்கப்பட்ட வாகனத்தையும் பார்வையிட்டோம். இந்த கிராமத்தில்தான் RC சாமியாரை சட்டையைக் கிழித்து வீதி வழியாக இழுத்துச்சென்று அவமானப்படுத்தியுள்ளார்கள்.

கடைசியாக ஊழியங்களை முடித்து பவானி பட்டணம் வந்தோம். கர்த்தருடைய கிருபையினால் பிப்ரவரி 28 சனிக்கிழமை மதியம் 2 மணிக்கு திட்டமிட்டபடி சுகத்துடன் திருச்சிக்கு திரும்பி வந்தோம்.

***ஜெபித்த, கொடுத்த, உழைத்த யாவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!***

## கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக் எடுத்து அனுப்ப வேண்டிய முறை

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)
**T.V.G.M. SOCIAL SERVICE** (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)
**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து
**MR. STEPHEN CHRISTOPHER, SB 12491010 18538 CANARA BANK,**
**Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu.**
**என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, கடைசி பக்கமுள்ள TVGM தலைமை அலுவலக முகவரிக்கு நோக்கத்தையும் உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு அனுப்பி உதவுங்கள்.**
**எங்கள் Email: 100village@tvgm.org- மூலம்**
**நீங்கள் காணிக்கை அனுப்பியுள்ள விபரத்தை தெரியப்படுத்துங்கள்.**

**இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்;**
**இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்.** ஏசாயா **43:21.**



கர்த்தருடைய கிருபையினால் 2009 பிப்ரவரி 1 ஞாயிறு அன்று காலை 7.00 முதல் மாலை 7.00 வரை துதி ஆராதனை நடைபெற்றது.
மாலையில் நடைபெற்ற வாக்குத்தத்தக் கூட்டத்தில் சகோதரி எலிசபெத் ஜெயபால், ( ஒரேப் ) அவர்கள் தேவசெய்தியை பகிர்ந்து கொண்டார்கள்.

**அடுத்த நடு இரவு ஜெபம்**
**2009 ஏப்ரல் 30 இரவு 7 - 12**

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை

**நாள் : 01.04.2009** புதன் கிழமை
**துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM
**வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM
**இடம்: TVGM** தலைமை அலுவலகம்
100 – கிராமம், திருச்சி – 620 102.

**துதிஆராதனை & வாக்குத்தத்த செய்தி**
**பாஸ்டர் S. ஜோயல் பாபு**
MCA.,D.Div.,
**கோயம்புத்தூர்**

**இயேசுவை விரும்புவோர் முகாம்:** கர்த்தருடைய கிருபையால் 07.02.09 அன்று ராதாபுரம் யூனியனில் முகாம் நடைபெற்றது. 5 புறமத நண்பர்கள் மிகுந்த ஆர்வமுடன் கலந்து கொண்டனர். அனைவரும் சபைக்கு வருவதாக வாக்குக் கொடுத்தார்கள். **தேவனுக்கே மகிமை. நன்றி :** பாஸ்டர் அன்பழகன்.

கர்த்தருடைய கிருபையினால் 19.02.2009 அன்று U.K-Modern **பாஸ்டர் சாம் பால் சபை** விசுவாசி **சகோ. ஆல்வின்** அவர்கள் தன்னுடைய திருமணத்திற்காக திருச்சி வந்தபோது, தன்னுடைய பெற்றோர் மற்றும் சகோதரன், சகோதரி ( கானான் Fellowship இலங்கை ) ஆகியோருடன் TVGM 100–கிராமத்திற்கு வந்து சிறுவர் இல்லப் பிள்ளைகளுடன் சாட்சிகளை பகிர்ந்து கொண்டார்கள்.






**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** ஒரிஸாவிலுள்ள துன்புறுத்தப் பட்ட கிறிஸ்தவர்களுக்கு வீடுகள் கட்டப்படவும், ஜெபவீடுகள் கட்டப் படவும் அன்றாட தேவைகள் சந்திக்கப் படவும் ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** இலங்கை தேசத்தில் பசியும் பட்டினியுமாக காயப்பட்ட ஒவ்வொரு நபர்களையும் கர்த்தர் குணமாக்கவும் காத்துக்கொள்ளவும், தேவை சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

**புதன்:** நாகர்கோவில் TVGM அறிமுகப்பணி அலுவலகத்திற்கு வீடு கிடைக்கவும், (ஆமினி) போன்ற 4சக்கர வாகனத்தை)கர்த்தர் கிருபையாய் கொடுக்கவும் ஜெபியுங்கள்.

**வியாழன்** கிறிஸ்தவ தலைமைத்துவ பயிற்சி மையம் ' Ambassador Institution's Trust' என்று பதிவு செய்யப்படவும், முதல் Project-க்கு 'The Ambassador School of Learning' (TASOL) என்ற பெயரைக் கொடுப்பது தேவ சித்தம் தானா எனவும் ஜெபியுங்கள்.

**வெள்ளி** உலகமெங்கும் இயேசுவின் நாமத்தை பறைசாற்றுவதற்காக பணி புரியும் ஒவ்வொரு கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்கும், பத்திரிக்கை ஆசிரியர்களுக்கும் தேவைப்படும் சகல உதவிகளும், பாதுகாப்பும், பரிசுத்தமும் பரத்திலிருந்து அருளப்பட ஜெபியுங்கள்.

**சனி:** TVGM பொது உறுப்பினர் கூட்டம் மற்றும் நிர்வாக கமிட்டி கூட்டத்திற்காக ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** TVGM 30–வது ஆண்டு நிறைவுவிழா ஸ்தோத்திர ஜெபக் கூட்டத்தில் தேவ செய்தி, சாட்சிகள், பாடல்கள் யாவையும் கர்த்தர் ஆசீர்வதிக்கும்படி ஜெபியுங்கள்.

## அவசர ஜெபக்குறிப்பு

**1.** TVGM Trust-க்கு FCRA ஆர்டர் கர்த்தர் கிருபையாக கொடுக்க ஜெபியுங்கள்.

**2.** TVGM Social Service -க்கு 80G ஆர்டர் கிடைக்க ஜெபியுங்கள்.

**3.** சிறுவர் இல்லத்திற்கு கோட்டா அரிசி ஆர்டர் கிடைக்க ஜெபியுங்கள்.

**4.** 2008-2009 அனைத்து Account-களும் ஆடிட் செய்யப்பட்டு சம்மந்தப் பட்ட அரசாங்க அலுவலகங் களுக்கு சமர்ப்பிக்கப்பட கருத்தாய் ஜெபியுங்கள்.

**5.** Leadership Centre -க்கு 5 ஏக்கர் நிலம் வாங்க ரூ1,00,000 கொடுக்கக்கூடிய 12 நபரை கர்த்தர் எழுப்பும்படி ஜெபியுங்கள்.

**T.V.G.M.குமரி மாவட்ட அறிமுகப்பணிஅலுவலகம்.**
சகோதரி ஷோபனா இவாஞ்சலின்
**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001.
**செல் : 98658 26424**
**போன் : 04652- 277251.**

**Form IV** Statement about ownership and other particulars about newspaper
**"HUNDRED VILLAGE MINISTRY"** to be published in the first issue of every year after last day of February.

1. **Place of Publication :** Somarasampettai
2. **Periodicity of its Publication :** Monthly
3. **Printer's Name :** Mr. Stephen Christopher **Nationality :** Indian
   **Address :** T.V.G.M Publication Printers, C/o T.V.G.M. Publication Trust, 4/274, Hundred Village, Somarasampettai, Trichy - 620 102.
4. **Publisher's Name :** Mr. Stephen Christopher **Nationality :** Indian
   **Address :** T.V.G.M. Publication Trust, 4/274, Hundred Village, Somarasampettai, Trichy - 620 102.
5. **Editor's Name :** Mr. Stephen Christopher **Nationality :** Indian
   **Address :** T.V.G.M. Publication Trust, 4/274, Hundred Village, Somarasampettai, Trichy - 620 102.
6. **Names and addresses of individuals :** No T.V.G.M. Publication Trust

I, Stephen Christopher hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Sd

**Date: 13.03.2009** **Signature of Publisher**

## பஞ்சப்பூர் தொழுநோயாளர் காலனி

**பாஸ்டர். விக்கி,** குடும்பத்துடன் சென்று தொழுநோயாளர்களுக்கும் ஏழைகளுக்கும் தேவசெய்தியளித்து, உணவு வழங்கினார்கள்.






Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

POSTAL REGISTRATION NUMBER : TRY / 013 / 2009 - 2011
LICENCED TO POST WITHOUT PREPAYMENT NO.:
Posting Date 25th at H.P.O. Trichy.

## TVGM சிறுவர் இல்லம்



2009 பிப்ரவரி மாதத்தில் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு விருந்து மற்றும் இனிப்புகள் வழங்க சிறப்பு காணிக்கை அனுப்பிய அனைவருக்காக **சகோதரி ஜெயசீலி கிறிஸ்டோபர்** சிறப்பு ஜெபம் ஏறெடுத்தார்கள்.

**நன்றி!**

சகோ. கோவிந்தராஜ் ( சிங்கப்பூர் ) சகோ. ராமகிருஷ்ணன் ( திருச்சி ), பாஸ்டர் ராஜ்குமார்( அபுதாபி)சகோ. பிரின்ஸ் – திருமணநாள் (திருச்சி) பாஸ்டர் விக்கி (நியூசிலாந்து) சகோ. பீட்டர் ( மகள் ஜெனி, ஜெனிஷா பிறந்தநாள் ) சகோ. ஆல்வின்( யூ.கே ) சகோதரி ஷீலா பாஸ்கரன்– (மகன் சாம்சன் பிறந்தநாள்) சகோதரி மெர்ஸிபாய் ( கன்னியாகுமரி ).

**TVGM தலைமை அலுவலக முகவரி**

ஜெப உதவி,காணிக்கை மற்றும் சகல தொடர்புகளுக்கும்:-

MR.STEPHEN CHRISTOPHER,
CHIEF EXECUTIVE OFFICER
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
100- VILLAGE ( Veeranginallur Road )
SOMARASAMPETTAI,(Hospital Stop)
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

STD Ph : 0-431 - 2607241
FAX : 0-431- 2607446
Email :
100village@tvgm.org

Website :
www.tvgm.org

தினசரி வாக்குத்தத்தம், செய்தி 100 கிராம ஊழிய அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011

HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി हन्ड्रेड विलेज मिनिस्ट्री